# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


## பேச்சுப்போட்டி 2022 ஆண்டு ஏழு

அனைவருக்கும் வணக்கம்

## இன்சொல் பேசுவோம்

இளம் தென்றல், இதமான வெப்பம், புலர் காலைப்பொழுது எல்லாம் மனதையும் உடலையும் சுகமாக வருடிவிடுபவை. இவைபோலத்தான் இன்சொல்லும் அன்பு, அன்னியோன்னியம், இணக்கப்பாடு என்பவற்றைத் தருகிறது. இதனால் மனிதனுடைய எல்லா நடவடிக்கைகளும் நல்ல பாதையில் பயணிக்கமுடிகிறது.

இதையே வள்ளுவரும்

“இன்சொல் இனிதீன்றல் காண்பான், எவன்கொலோ

வன்சொல் வழங்கு வது”

எனக்கூறியுள்ளார்.

எமது தாய்மொழி செம்மொழியாம் தமிழ்மொழியாகும். தமிழிலுள்ள மெய்யெழுத்துக்களை நம் முன்னோர் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தினர். ங, ஞ, ண, ந, ம, ன என்ற ஆறு எழுத்துகளும் மெல்லினம் ஆகும். இவ்வெழுத்துகளைக் கொண்ட சொற்கள் இன்சொற்களாய் அமைவதைக் காணலாம். இது நம் தமிழ்மொழியின் மாண்பையும் தமிழர் தம் மாட்சிமையையும் விளக்கி நிற்கிறது.

கடினமான வார்த்தைகள் காதுக்கு மட்டுமல்ல மனதுக்கும் இனிப்பாய் அமைவதில்லை. வன்சொற்களால் செய்கைகள் சீரழிகின்றன. பகைமை வளர்கின்றன. வன்முறைகள் வித்திடப்படுகின்றன.

“இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே” என்றார் ஔவையார்.

குழந்தைகள் முதல் பெரியவர்வரை அனைவரும் இன்சொல்லால் மகிழ்வர் என்பது தெளிவு. இதம் பல தரும் இன்சொல் பேசுவதை வாழ்வில் கடைப்பிடிப்போம். இதமாகப் பழகுவோம். இன்புற்று வாழ்வோம்.

நன்றி
வணக்கம்